UK Health Security Agency

NHS

# MenB தடுப்பூசி போடப்பட்ட பிறகு காய்ச்சலைத் தடுப்பதற்கும் அதற்கு சிகிச்சை அளிப்பதற்கும் பாராசிட்டமால் பயன்படுத்துதல்

### என் குழந்தைக்கு இப்போதுதான் MenB தடுப்பூசி போடப்பட்டுள்ளது, இப்போது நான் என்ன எதிர்பார்க்க வேண்டும்?

எந்தவொரு தடுப்பூசிக்குப் பிறகும் காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் 8 மற்றும் 12 வாரங்களில், மற்ற வழக்கமான தடுப்பூசிகளுடன் சேர்த்து MenB தடுப்பூசி (பெக்ஸெரோ) போடப்படும்போது காய்ச்சல் ஏற்படுவது மிகவும் பொதுவானது. பாராசிட்டமால் வழங்கப்படவில்லை என்றால், பாதி அளவிற்கும் மேற்பட்ட கைக்குழந்தைகளுக்கு இந்தத் தடுப்பூசிகளைப் போட்ட பிறகு காய்ச்சல் ஏற்படும். தடுப்பூசி போட்ட 6 மணிநேரத்திற்குப் பிறகு காய்ச்சல் அதிகமாக இருக்கும். சுமார் 2 நாட்களுக்குள் முற்றிலும் சரியாகிவிடும். குழந்தையின் நோயெதிர்ப்பு சக்தி தடுப்பூசிக்குப் பதிலளிக்கிறது என்பதைக் காய்ச்சல் காட்டுகிறது. எனினும், காய்ச்சலின் அளவு ஒவ்வொரு குழந்தையையும் பொறுத்து மாறுபடும். தடுப்பூசி உங்கள் குழந்தையை எவ்வளவு நன்றாகப் பாதுகாக்கும் என்பதை இதைக் கொண்டு தீர்மானிக்க முடியாது.

### காய்ச்சல் ஏற்படுவதை நான் எவ்வாறு குறைக்கலாம்?

தடுப்பூசி போட்ட உடனேயே பாராசிட்டமால் கொடுக்கவும். காய்ச்சல் உருவாகும் வரை காத்திருக்க வேண்டாம். இது உங்கள் குழந்தைக்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுக்கும். பாராசிட்டமால் மூலம், 5 குழந்தைகளில் 1க்கும் குறைவான குழந்தைக்கே காய்ச்சல் ஏற்படும், லேசான வெப்பநிலையே (39°Cக்கு கீழே) இருக்கும். உங்கள் குழந்தை எரிச்சல் அல்லது அசௌகரியமாக உணரக்கூடிய வாய்ப்பையும் பாராசிட்டமால் குறைக்கும் (ஊசி போட்ட இடத்தில் ஏற்படும் வலி போன்றவை).

### எந்த பாராசிட்டமால் தயாரிப்பைப் பயன்படுத்த வேண்டும்?

நீங்கள் **கைக்குழந்தைகளுக்கான வாய்வழி பாராசிட்டமால் சஸ்பென்ஷனை பயன்படுத்த வேண்டும். இந்த வகையான பாராசிட்டமால் கைக்குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்குப் பயன்படுத்தும் வகையில் திரவ வடிவில் வருகிறது. இது 120மி.கி/5மி.லி வலிமையைக் கொண்டது.**

கைக்குழந்தைகளுக்கான பாராசிட்டமால் சஸ்பென்ஷன் உங்கள் வீட்டில் இல்லையென்றால், உள்ளூர் மருந்தகம் அல்லது சூப்பர் மார்க்கெட்டில் அவற்றை வாங்கலாம். தடுப்பூசி போட்ட ஒரு மணிநேரத்திற்குள் பாராசிட்டமாலின் முதல் டோஸை நீங்கள் கொடுக்க வேண்டும். பல்வேறு தயாரிப்புகள் கிடைக்கின்றன (பாட்டில்கள், சாஷே உட்பட), ஆனால் கைக்குழந்தைகளுக்கான தேவையான வகை பாராசிட்டமால் சஸ்பென்ஷன் 120மி.கி/5மி.லி.

(குறிப்பு: கைக்குழந்தைகளுக்கான பாராசிட்டமால் (250மி.கி/5மி.லி) மருந்தைவிட ஜூனியர் பாராசிட்டமால் (6+) வலுவானது. அதை கைக்குழந்தைகளுக்குப் பயன்படுத்தக்கூடாது.)

### எந்தெந்த தடுப்பூசிகளுக்குப் பிறகு எனது குழந்தைக்கு பாராசிட்டமால் கொடுக்க வேண்டும்?

MenB தடுப்பூசிகள் போடப்பட்ட பிறகு உங்கள் குழந்தைக்கு பாராசிட்டமால் கொடுக்க வேண்டும். MenB தடுப்பூசி பொதுவாக உங்கள் குழந்தையின் முதல் மற்றும் இரண்டாவது நோய்த்தடுப்பு முன்பதிவுகளின்போது 8 மற்றும் 12 வாரங்களில் வழங்கப்படுகிறது.

12 மாதங்களுக்கு மேல் போடப்படும் MenB தடுப்பூசிகளுக்கு வழக்கமாகப் பாராசிட்டமால் தேவையில்லை. இந்த வயதில், இந்தத் தடுப்பூசியால் காய்ச்சல் ஏற்படும் சாத்தியம் மற்ற தடுப்பூசிகளைப் போன்ற அதே அளவிலேயே இருக்கும்.

### எவ்வளவு பாராசிட்டமால் கொடுக்க வேண்டும்?

MenB தடுப்பூசி போடப்பட்ட பிறகு 2.5மி.லி (60மி.கி) பாராசிட்டமால் மொத்தம் 3 டோஸ் பரிந்துரைக்கப்படுகிறது. தடுப்பூசி போட்ட உடனேயே நீங்கள் முதல் டோஸைக் கொடுக்க வேண்டும்.

பாராசிட்டமாலின் இரண்டாவது டோஸை 4முதல் 6 மணிநேரத்திற்குப் பிறகும், மூன்றாவது டோஸை 4 முதல் 6 மணிநேரத்திற்குப் பிறகும் கொடுக்க வேண்டும் (அட்டவணையைப் பார்க்கவும்).

2.5மி.லி டோஸை ஒரு சிரிஞ்சில் அளந்து எடுத்துக்கொண்டு அல்லது 2.5மி.லி ஸ்பூன் மூலம் வாய்வழியாகக் கொடுக்கப்பட வேண்டும் (இது பொதுவாக மருந்துப் பேக்கில் உள்ள ஸ்பூனின் சிறிய முனையாகும்).

குறைப்பிரசவக் குழந்தைகளுக்கு (32 வார கர்ப்பத்திற்கு முன்பு பிறந்தவர்கள்), தடுப்பூசி போடும்போது குழந்தையின் எடைக்கு ஏற்ப உங்கள் மருத்துவரால் பாராசிட்டமால் பரிந்துரைக்கப்பட வேண்டும். நீங்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெற்று, அவர் பரிந்துரைக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

### முதன்மை MenB தடுப்பூசிகளுக்குப் பிறகு பயன்படுத்தக்கூடிய, கைக்குழந்தைகளுக்கான பாராசிட்டமால் சஸ்பென்ஷனின் அளவு மற்றும் நேரம் (120மி.கி/5மி.லி) (பொதுவாக பிறந்து 8 மற்றும் 12 வாரங்களான குழந்தைகளுக்கு)

| குழந்தையின் வயது | 6 மாதங்கள் வரை (பொதுவாக 8 மற்றும் 12 வாரங்களில்) |
|---|---|
| டோஸ் 1 | தடுப்பூசி போடப்பட்ட உடனேயே 2.5மி.லி (60மி.கி) டோஸ் |
| டோஸ் 2 | முதல் டோஸ் கொடுத்த 4 முதல் 6 மணிநேரத்திற்குப் பிறகு ஒரு 2.5மி.லி (60மி.கி) டோஸ் |
| டோஸ் 3 | இரண்டாவது டோஸ் கொடுத்த 4 முதல் 6 மணிநேரத்திற்குப் பிறகு ஒரு 2.5மி.லி (60மி.கி) டோஸ் |

உங்கள் குழந்தைக்கு MenB தடுப்பூசி போடப்பட்டிருந்தால் மட்டுமே இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள ஆலோசனை பொருந்தும். உங்கள் குழந்தைக்கு வேறு எப்போதாவது காய்ச்சல் இருந்தால், தயாரிப்பு பேக்கேஜிங் மற்றும் நோயாளி தகவல் தொடர்பான துண்டுப்பிரசுரத்தில் உள்ள வழிமுறைகள் மற்றும் டோஸ் ஆலோசனைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

### பாராசிட்டமாலின் 3 டோஸ்களைக் கொடுத்த பிறகும் என் குழந்தைக்குத் தொடர்ந்து காய்ச்சல் இருந்தால் என்ன செய்வது?

சில குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட்டு, 3 டோஸ் பாராசிட்டமால் கொடுத்த பிறகும் கூட காய்ச்சல் தொடர்ந்து இருக்கலாம். தடுப்பூசி போட்ட 48 மணிநேரத்திற்குப் பிறகும் உங்கள் குழந்தைக்குக் காய்ச்சல் இருந்து, பிற செயல்பாடுகள் நன்றாக இருந்தால், கைக்குழந்தைகளுக்கான பாராசிட்டமால் (120மி.கி/5மி.லி) சஸ்பென்ஷனின் அதே 2.5மி.லி டோஸை (60மி.கி) தொடர்ந்து குழந்தைக்குக் கொடுக்கலாம்.

- **குறைந்தது 4 மணிநேரம் இடைவெளி விட்டே டோஸ்களைக் கொடுக்க வேண்டும், 24 மணிநேரத்தில் 4 டோஸ்களுக்கு மேல் ஒருபோதும் கொடுக்க வேண்டாம்.**

உங்கள் குழந்தைக்குப் பல லேயர்கள் கொண்ட ஆடைகள் அல்லது போர்வைகளைப் பயன்படுத்த வேண்டாம். அவர்களுக்கு நிறைய திரவங்களைக் கொடுங்கள். உங்கள் குழந்தை தாய்ப்பால் அருந்தினால் அதைக் கொடுப்பது நல்லது.

- **உங்கள் குழந்தையின் ஆரோக்கியம் பற்றி நீங்கள் கவலைப்பட்டால், உங்கள் உள்ளுணர்வை நம்புங்கள், GP உடன் பேசுங்கள். இல்லையென்றால், இங்கிலாந்தில் NHS 111 மற்றும் வேல்ஸில் 0845 46 47 என்ற எண்களை அழைத்து நீங்கள் ஆலோசனை பெறலாம்.**
- **தடுப்பூசி போட்ட 48 மணிநேரத்திற்குப் பிறகும் உங்கள் குழந்தைக்குக் காய்ச்சல் இருந்தால், GP உடன் பேசுங்கள். இல்லையென்றால், இங்கிலாந்தில் NHS 111 மற்றும் வேல்ஸில் 0845 46 47 என்ற எண்களை அழைத்து நீங்கள் ஆலோசனை பெறலாம்.**

## பிற பொதுவான கேள்விகள்:

### பாராசிட்டமால் கொடுக்க என் குழந்தையை எழுப்பலாமா?

MenB தடுப்பூசி போட்ட உடனேயே பாராசிட்டமாலின் முதல் டோஸை நீங்கள் கொடுக்க வேண்டும். அடுத்த டோஸுக்கான நேரம் வரும்போது உங்கள் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தால், அவர்களை எழுப்பாதீர்கள். ஒவ்வொரு டோஸுக்கும் இடையில் குறைந்தது 4 மணிநேரம் இருக்கும் பட்சத்தில், குழந்தை எழுந்த பிறகு நீங்கள் கொடுக்கலாம்.

### கைக்குழந்தைகளுக்கு பாராசிட்டமால் கொடுப்பது சரியா?

பிறந்து 2 மாதத்தில் இருந்தே குழந்தைகளின் காய்ச்சலை நிர்வகிக்க பாராசிட்டமால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மருந்துப் பேக்கில் உள்ள நோயாளி தகவல் துண்டுப்பிரசுரத்தில், பிறந்து 2 முதல் 3 மாதமேயான குழந்தைகளுக்கு மருத்துவர் அல்லது மருந்தாளரின் ஆலோசனையின்றி 2 டோஸ்கள் மட்டுமே கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கலாம்.

கைக்குழந்தைகளில் பாராசிட்டமால் பாதுகாப்பானது என்றாலும், காரணமின்றி காய்ச்சல் ஏற்படும் குழந்தைக்குப் பெற்றோர்கள் பாராசிட்டமால் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காகவே பேக்கேஜிங்கில் அதுபோன்று குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய காய்ச்சல் ஒரு கடுமையான நோய்த்தொற்றின் அறிகுறியாக இருக்கலாம், மேலும் அதிக நேரம் இதைப் பயன்படுத்துவது மருத்துவ உதவியைப் பெற்றோர் நாடுவதைத் தாமதப்படுத்தலாம்.

இருப்பினும், தடுப்பூசிக்குப் பிறகு காய்ச்சல் ஏற்படுவது பொதுவானது என்பதால் MenB தடுப்பூசிக்குப் பிறகு 48 மணிநேரம் வரை மருத்துவ ஆலோசனையைப் பெறாமலேயே பாராசிட்டமால் கொடுப்பது சரிதான் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த காலகட்டத்தில், தொற்றுநோயைவிட தடுப்பூசி காரணமாகவே காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. பாராசிட்டமால் உங்கள் குழந்தையின் உடல்நிலையை மேம்படுத்தும், மேலும் 24 மணிநேரத்தில் 2.5மி.லி டோஸ் 4 முறைக்கு மேல் கொடுக்காத பட்சத்தில், ஆபத்து ஏதுமில்லை.

### உற்பத்தியாளரின் நோயாளி தகவல் துண்டுப்பிரசுரத்தில் (PIL) ஏன் வெவ்வேறு தகவல்கள் உள்ளன?

நீங்கள் வாங்கும் பாராசிட்டமாலில் நோயாளி தகவல் துண்டுப்பிரசுரம் (PIL) இருக்கும். கைக்குழந்தைகளுக்கான பாராசிட்டமால் சஸ்பென்ஷன் 120மி.கி/5மி.லி மருந்துடன் வரும் PILஇல், MenB தடுப்பூசி போடப்பட்ட பிறகு பயன்படுத்த வேண்டிய அளவானது மருத்துவ நிபுணர்களின் பரிந்துரைகளில் இருந்து வேறுபடலாம். இங்கே, இந்தத் துண்டுப்பிரசுரத்தில், MenB தடுப்பூசியைத் தொடர்ந்து பாராசிட்டமால் பயன்பாட்டிற்கான குறிப்பிட்ட பரிந்துரைகளின் விவரங்களை நாங்கள் தருகிறோம். பாராசிட்டமால் தயாரிப்பு பற்றிய முழுத் தகவலுக்கு, உற்பத்தியாளர்களின் PILஐப் பாருங்கள்.

### 12 மாதங்களில் என் குழந்தைக்கு பூஸ்டர் தடுப்பூசிகள் போடும்போதும் பாராசிட்டமால் தேவையா?

பிறந்து 12 மாதமான குழந்தைகளுக்கு, MenB தடுப்பூசியால் காய்ச்சல் ஏற்படும் சாத்தியம் மற்ற தடுப்பூசிகளைப் போன்ற அதே அளவிலேயே இருக்கும். எனவே, வழக்கமான 12 மாத தடுப்பூசிகளுடன் உங்கள் குழந்தை 3 டோஸ் பாராசிட்டமால் எடுக்கத் தேவையில்லை. இருப்பினும், உங்கள் குழந்தைக்கு வீட்டில் காய்ச்சல் ஏற்பட்டால் அல்லது அசௌகரியமாக இருப்பதாகத் தோன்றினால், பாக்கெட்டில் உள்ள வழிமுறைகளில் உள்ள டோஸ் அட்டவணையைப் பயன்படுத்தி அந்த வயதுடைய குழந்தைக்கு ஏற்ற அளவில் உங்கள் குழந்தைக்குப் பாராசிட்டமால் கொடுக்கலாம்.

பிறந்து 2 முதல் 3 மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்கு 2 டோஸுக்கு மேல் பாராசிட்டமால் கொடுப்பதற்கான ஆலோசனை குழந்தைக்கு MenB தடுப்பூசி போடப்பட்ட பிறகே பொருந்தும். உங்கள் குழந்தைக்கு வேறு எந்த நேரத்திலும் காய்ச்சல் இருந்தால், தயாரிப்பு பேக்கேஜிங் மற்றும் நோயாளி தகவல் துண்டுப்பிரசுரத்தில் உள்ள வழிமுறைகள் மற்றும் டோஸ் ஆலோசனைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

NHS

**www.nhs.uk/vaccinations**

© Crown copyright 2025. Version 4. UK Health Security gateway number: 2025-161. Product code: 3083756TAM Tamil. 50K SEP 2025 (APS)
To order more copies of this asset, please visit: **www.healthpublications.gov.uk** or call 0300 123 1002.